[1994 ஏப்ரல் 20

310–

நிலக்கோட்டைத் தொகுதியில் பாசன வசதியை மேம்படுத்துதல்

20356 திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திண்டுக்கல்–அண்ணா மாவட்டம், நிலக்கோட்டைத் தொகுதியில் மஞ்சளாறு, மருதா நதி ஆகிய இரு நதிகளால் எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறுகின்றது?

(ஆ) மழைக்காலங்களில் இவ்வாறுகளின் தண்ணீர் வீணாக வைகையில் கலப்பதால், நிலக்கோட்டையை நோக்கி ஒரு கால்வாய் வெட்டி பாசன வசதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில் மஞ்சளாறு பாயுமிடத்தில் பாசன வசதிபெறும் பரப்பு 2,097.43 ஏக்கர், மற்றும் மருதாநதி பாயுமிடத்தில் பாசன வசதி பெறும் பரப்பு 1,302.40 ஏக்கர் ஆகும்.

(ஆ) வைகை பாசனப்பகுதிக்கு நீரின் தேவை பற்றாக்குறை நிலையில் உள்ளதால், புதிய பாசனப்பகுதிக்குக் கால்வாய் வெட்டி திருப்ப இயலாது.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு நதிகள் மூலமாக 2400 ஏக்கர் மற்றும் 1300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல, அந்த சுற்றுப் பகுதிகள் மலை அடிவாரத்திலிருந்து மிக அண்மையில் இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியில் மழை பெய்தவுடன் மழை நீர் வடிகாலாக வடிந்து கீழ்நோக்கி ஓடிவந்து விடுகிறது. எனவே, அந்தத் தண்ணீரை எல்லாம் வீணாக்காமல் தடுப்பதற்கு, அந்தப் பகுதி நிலங்கள் வளம் பெறுவதற்கு செயல் திட்டமாக இந்தக் கால்வாயை வெட்டித் தர வேண்டுமென்று ஏற்கனவே பலமுறை இந்த மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப்

1994 ஏப்ரல் 20]

பின்தங்கிய பகுதியினுடைய நிலையை கருத்திற்கொண்டு அப்படிப்பட்ட ஒரு கால்வாய் வெட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதா நதி, மஞ்சளாறு என்பது வைகை நதியினுடைய துணை நதிகளாகும். ஏற்கனவே வைகை நதியினுடைய நீரை மதுரை மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்குப் பகிர்ந்து விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கான ஆயக்கட்டுகளும் நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்தத் துணை நதிகளிலிருந்து வருகிற தண்ணீரை வைகை ஆற்றோடு சேர்ந்து கணக்கிட்டுதான் ஏற்கனவே இருக்கிற பாசனப் பரப்பை நாம் நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆகவே அதில் வருகிற வரத்தை எல்லாம் கணக்கில் எடுத்துதான் அந்த மூன்று மாவட்டங்களுக்கும் ஆயக்கட்டுகள் நிர்ணயம் செய்து தண்ணீர் பாய்ச்சப்படுகிற சூழ்நிலையில் புதியதாக கால்வாய் வெட்டினால், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அந்தப் பாசன விஸ்தீரணம் உள்ள நிலங்களுக்கு, பாசனத்திற்கு உட்பட்ட நிலங்களுக்குத் தண்ணீர் தர இயலாது. ஆகவேதான் புதிய கால்வாய் நிலக்கோட்டைக்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிவித்தேன். ஏற்கனவே அந்த 'இரிகேஷன் ரைட்ஸ்' என்று சொல்லப்படுகிற பாசன உரிமை பெற்றிருக்கிற நிலங்களுக்கு நாம் தண்ணீர் கொடுப்பதற்கு, இந்தத் துணை நதிகளைச் சேர்த்துத் தான் வைகை ஆற்றுத் தண்ணீரை கணக்கிட்டு இருக்கிறோம். எனவே, புதியதாக கால்வாய் வெட்டுவதற்கு சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. சுப்புரத்தினம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிலக்கோட்டை தொகுதியில் இந்தக் கால்வாய் வெட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொன்னார்கள். மிகவும் பொருத்தமான பதிலைத் தான் சொல்லி இருக்கிறார்கள். காரணம் இன்றைக்கு இந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினர் இந்த அவையில் பேசி, இந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டத்தை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அந்தத் தொகுதிக்கு வழங்கி இருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இதெல்லாம் கூடாது. உங்கள் வீட்டில் இதுபோன்ற சண்டை சச்சரவு எல்லாம் வைத்துக் கொள்ளலாம். ஒரு உறுப்பினர் மீது கேள்வி நேரத்தின்போது இப்படிச் சொல்லக் கூடாது. அதெல்லாம் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: இந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நம்முடைய அரசு அனுமதி வழங்கியிருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் என்பதை நீண்ட நாட்களாய் காங்கிரஸ் காலத்திலும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும், தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், பழைய ஆட்சிக் காலத்திலும் கேட்டார்கள். அனால் நம்முடைய ஒப்பற்ற தலைவி, தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை என்று கூடப் பார்க்காமல் கோடிக்கணக்கான ரூபாயை உள்ளடக்கிய திட்டம் என்றுகூட நினைக்காமல், அவர் கேட்ட மாத்திரத்திலேயே அனுமதி வழங்கி, மாற்றாரை மதிக்கிற மனப்பான்மை படைத்தவர் என்று நிருபித்துக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவி காலத்திலே இந்தத் திட்டம் வந்ததை, வேறு காலத்திலே வந்ததாக அந்தச் சட்டமன்ற உறுப்பினர் பேசியதாகச் சொன்னார்கள். அவர்கள் அங்கொன்று பேசுகிறார்கள், இங்கொன்று பேசுகிறார்கள். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் திட்டம் என்பது, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி காலத்திலேதான், அவர்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களிடத்திலே நேரடியாகக் கொடுத்து, அந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று எனக்கு உத்தரவினை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்ததன் காரணமாக, துறையின் மூலம் ஆய்வு செய்து, அதற்கான பணிகளிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அனுமதி

வழங்கியிருக்கிறோம். அதற்கான திட்ட ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்து அதற்குள்ள பெனிபிட்-காஸ்ட்-ரேஷியோ எல்லாம் பார்த்து, எவ்வளவு ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்க முடியும், அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அதற்கான முழு முடிவை இந்த அரசு எடுக்கும். அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 311, திரு. ம. தனபால். இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

311–

திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரையுள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.

****19095—திரு. ம. தனபால்:***

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

கிழக்கு கடற்கரை சாலையில், திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரை உள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரைச் சாலைகளிலே மிகச் சிறப்பான முறையிலே பல கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஒரு சிலர் அனுமதி இல்லாமலேயே சில கட்டிடங்களை அங்கே